பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 4 (19—11—68) செவ்வாய் ★ வெளியூர் : கார்த்திகை 5 (20—11—68) புதன் [இதழ் : 128

## விவசாயிகளுக்குக் கடன் வசதி

புதுடில்லி, நவ. 19—

"தங்களுடைய மொத்த டெபாசிட்டுகளில் 15-சதவிகிதத்தையாவது விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக ஒதுக்கி வைக்கும்படி, பாங்கிகளை, தேசியக் கடன் கவுன்சில் கேட்டிருக்கிறது"

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிதித் துறை துணையமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்.

# மாநிலங்கள் உரிமையைப் பறிப்பது டெல்லியின் வாடிக்கையாகி விட்டது!

## ஆபத்து வேளையில் மக்களுக்கு உதவுவதில் அக்கறையைக் காணோம்

### பொறுப்பைத் தட்டிக்கழித்து மாநிலங்கள் மீது சுமத்துவதா ?---
### மக்களவையில் செ. கந்தப்பன் கண்டனம்

புதுடில்லி, நவ. 19 –

"மாநிலங்களுக்குரிய உரிமைகளைப் பறித்துக்கொள்வதிலேயே மத்திய அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வந்துள்ளது ; அதே நேரத்தில், இயற்கைக் கோளாறுகளால் ஏற்படும் துன்பத்தைப் போக்குவதில் அது பொறுப்பைத் தட்டிக்கழித்து, மாநிலங்களின் மீது அதனைச் சுமத்திவிடுகிறது"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் செ. சந்தப்பன் அவர்கள், உணவு நிலைமை பற்றிய விவாதத்தின்போது சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நாடு முழுவதிலும் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுக் கடுமையான சேதம் உண்டாகியிருக்கிறது; இப்படி நடப்பது இதுதான் முதல் தடவையன்று; ஏற்கனவே பல தடவை நடைபெற்றிருக்கிறது.

"ஒரு பகுதியில் வெள்ளம் ஏற்பட்டால் அதைச் சமாளிப்பது அந்த மாநிலத்தின் பொறுப்பு என மத்திய அரசு கருதுகிறது ; இது சரியல்ல ; வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி எதுவாக இருந்தாலும் மத்திய அரசு உடனடியாக உதவிக்கு வர வேண்டும் ; ஆனால் அப்படிச் செய்யவில்லை ; இது ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது."

## ஆந்திர முதல்வரும் அதிர்ச்சி யடைகிறார்

### நிதிக் குழு இடைக்கால அறிக்கை பற்றி அதிருப்தி

மசூலிப்பட்டணம், நவ. 19—

"நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை, எனக்குப் பெருமளவில் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

"கூடுதலான வாழ்க்கைப்படிச் செலவுகளை அளிப்பதாக மாநில அரசுகள் உறுதியளித்திருக்கின்றன ; இதனால் மாநில அரசுகளுக்குக் கூடுதலாக ஏற்படக் கூடிய செலவினங்களை நிதிக் குழு கருத்தில் கொள்ளாமல் போனது துரதிருஷ்டவசமானதாகும்.

"இறுதி அறிக்கையாவது, மாநில அரசுகளுக்கு அதிக அளவில் பயன்தரக்கூடியதாகவும், நியாயமானதாகவும் இருக்குமென நம்புகிறேன்"

என்று ஆந்திர முதலமைச்சர் சே. பிரும்மானந்த ரெட்டி கூறியிருக்கிறார்.

"ஆந்திரத்தின் நான்காவது திட்டத்திற்கு ரூ 650 கோடி தேவைப்படும்" என அவர் தெரிவித்தார்.

## தமிழக அரசின் கொள்முதல் திட்டம்

### பருவ நிலையையொட்டி மறுபரிசீலனை

வேலூர், நவ. 19—

"அரிசி வழங்கும் திட்டத்தைச் சீரமைத்து, குறிப்பாக தஞ்சை, வட ஆற்காடு மாவட்டங்களில் அடுத்த அறுவடையின்போது எப்படிக் கொள்முதல் செய்வது என்பது பற்றி அரசு மறு ஆய்வு செய்யும்.

"எதிர்பாராதவிதமாகத் தமிழகத்தில் பருவநிலை பாதகமாக இருப்பதால், இம்முடிவு எடுக்கப்பட வேண்டியிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## வாழ்க-- இந்திரா காந்தி!

சென்னை, நவ. 19—

இந்தியாவின் தலைமையமைச்சரும், இந்தியாவின் முதல் தலைமையமைச்சரான பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் திருமகளுமான திருமதி இந்திரா காந்திக்கு இன்று வயது 51.

தந்தையைப்போலவே உலக அறிமுகம் பெற்றுள்ள இவருக்கு, உலக முழுவதிலுமிருந்தும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் வந்து குவிந்துள்ளன.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள்.

தலைமையமைச்சருக்கு நமது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க இந்திரா காந்தி பல்லாண்டு !

—(ஆ–ர்)

## அரசு மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர்

### சலுகை வரம்பை உயர்த்தத் தமிழக அரசு யோசனை

### அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அறிவிப்பு

சென்னை, நவ. 19 –

"அரசு மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர்களில் ரூ. 100-க்குக் குறைவாக மாத வருவாய் உள்ளவர்களுக்கு மட்டுமே இப்போது இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது ; இலவசச் சிகிச்சைக்கான இந்த வருவாய் வரம்பை ரூ. 150 அல்லது 200-ஆக உயர்த்துவது பற்றித் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது" எனச் சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அறிவித்துள்ளார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது :—

"பண மதிப்புக் குறைந்துவிட்டதனால் இலவச சிகிச்சைக்கான வருவாய் வரம்பை உயர்த்த வேண்டும் என்று கேட்பது நியாயம்தான் ; அதுபோல பணம் கட்டிச் சிகிச்சை பெறுவோருக்குக் கட்டணம் உயர்த்த வேண்டியதாக இருக்கும்.

"பணத்திற்கு மதிப்பு அதிகமாக இருந்த காலத்தில் சிகிச்சைக்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட்டது ; இப்பொழுது பணத்தின் மதிப்பும் குறைந்துவிட்டது -- விலைவாசியும் அதைத் தொடர்ந்து மற்ற செலவும் அதிகரித்துவிட்டன ; ஆனால், பணம் கட்டிச் சிகிச்சை பெறுபவர்களிடம் பழைய நிர்ணயிப்பின்படிதான் அரசு மருத்துவமனைகளில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது ; ஆகவே, அந்தக் கட்டணத்தை உயர்த்தலாமா என்பது பற்றியும் அரசு பரிசீலித்துவருகிறது."

## இத்தாலியில் சத்தியவாணிமுத்து

### போப்பாண்டவரைச் சந்தித்தார்

வாடிகன் நகர், நவ. 19—

இத்தாலி நாட்டிற்குச் சென்றுள்ள அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், நேற்று போப்பாண்டவரைச் சந்தித்துப் பேசினார்.

# கழகத்திற்கு முதல் வெற்றி

## கூட்டணி வேட்பாளர் போட்டியின்றித் தேர்வு

### புதுவை நகராட்சித் தேர்தல் : பாகூர்-மனப்பட்டுத் தொகுதி முடிவு

சென்னை, நவ. 18 –

புதுவை மாநில நகராட்சிமன்றத் தேர்தலில் கூட்டணி வேட்பாளர் ஒருவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

புதுவை மாநில நகராட்சிமன்றங்களுக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது தெரிந்ததே.

வருகிற டிசம்பர் 16-ஆம் நாள் புதுவை மாநிலத்தில் நகராட்சித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவிருக்கிறது.

புதுவை மாநிலம் பாகூர் நகராட்சிமன்றத்துக்கான மனப்பட்டுத் தொகுதியில் கூட்டணி வேட்பாளராக மனப்பட்டு தி. மு. க. அவைத் தலைவரான தோழர் ஆர். கோவிந்தராசு வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார்.

இவரை எதிர்த்து வேறு யாரும் போட்டியிடாததால், இவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## 572 இரஷ்ய நிபுணர்கள்

### பொகாரோ ஆலைக்காக வருகை

புதுடில்லி, நவ 19 –

பொக்காரோ உருக்காலையை உருவாக்கும் முதல்கட்ட வேலை நடக்கும்போது உதவுவதற்காக இரஷ்யாவிலிருந்து மொத்தம் 572 நிபுணர்கள் வரவிருப்பதாகத் தெரியவருகிறது.

வரவிருக்கும் இரஷ்ய நிபுணர்களின் உச்சபட்ச எண்ணிக்கைதான் இப்போது 572 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது ; உண்மையில் எத்தனைபேர் வரவேண்டும் என்பதை அவ்வப்போது நிலைமைக்கேற்பவும் தேவைக்கேற்பவும் பொக்காரோ, உருக்கு நிறுவனத்தினரும்--சோவியத்திலிருந்து நிபுணர்களை அனுப்புபவர்களும் சேர்ந்து முடிவு செய்வார்களாம்.

இரஷ்ய நிபுணர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுபற்றி அரசு எவ்வித யோசனையும் செய்யவில்லை என்றும், குறைப்பது பற்றி சோவியத்துக்கு எவ்வித யோசனையும் கூறவில்லை என்றும் தெரிகிறது. 1968 அக்டோபர் இறுதியில் பொக்காரோவில் 131 சோவியத் நிபுணர்கள் இருந்தனர்.

## நாள்தோறும் 1000 பேர் தற்கொலை!

### உலக சுகாதார நிறுவனம் மதிப்பீடு

ஐ. நா., நவ. 19—

உலகம் முழுவதிலுமாக நாளொன்றுக்கு சராசரி ஆயிரம் பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர் ; கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் ஆண்டொன்றுக்குத் தற்கொலை செய்து கொண்டு மாள்கின்றனர் !

இந்தப் புள்ளிவிவரத்தை உலக சுகாதார நிறுவனம் மதிப்பிட்டு அறிவித்துள்ளது.

பல இலட்சம்பேர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் அது தெரிவிக்கிறது.

84 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தில் இதுபற்றி மேலும் அது தெரிவித்துள்ளதாவது :—

"தற்கொலைகளைத் தவிர்க்க இருக்கின்ற ஒரே வழி இதுதான் ; தற்கொலை செய்துகொள்ளப் போவதாக ஒருவர் கூறும் போது, அவர் கூறுவதை அலட்சியம் செய்துவிடக்கூடாது. அப்படிப்பட்டவர்களின் மனத்தை மாற்ற ஆவன செய்யவேண்டும்."

நம்நாடு
இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 4 (19-11-68) செவ்வாய்

# சனநாயக விரோதச் செயல்

சென்ற கிழமை நாடாளுமன்றத்தில், எதிர்க் கட்சியாக இருந்துவருகின்ற இடதுசாரிகள் சார்பில், இந்திரா அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தகைய தீர்மானத்தின் முடிவு எப்படி இருந்திடக்கூடும் என்பதை, தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் ஏற்கனவே அறிந்தே உள்ளனர்.

ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் கூடுதலாக இருக்கின்ற நிலையில், எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்டக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் உட்பட -- தீர்மானங்கள் எதுவாக இருந்திட்டாலும் -- அவர்கட்குத் தோல்விதான் கிடைத்திடும். 'தோல்விதான் கிடைத்திடும்' எனத் தெரிந்திருந்தும்கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குரிய அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அரசிடம் தாங்கள் காணக்கூடிய குற்றங்குறைகளையும் அதிருப்தியையும் விரிவாகத் தெரிவித்துக்கொள்ள, அத்தகைய தீர்மானத்தைக் கொண்டுவருவது சனநாயக முறையில் எதிர்க் கட்சிகளுக்கு இருந்திடக்கூடிய ஒரு வாய்ப்பாகும்.

இந்திரா அமைச்சரவைமீது இதற்குமுன்னரும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்தீர்மானங்கள் மீது காரசாரமாக விவாதங்கள் நடைபெற்றுள்ளன.

இறுதியாக, அத்தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அத்தருணங்களில் தாங்கள் கொண்டுவந்த தீர்மானங்களுக்கு உடன்பாடாக வாக்களித்த அளவுடன், எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மனநிறைவு பெற்றுவிட்டிருக்கின்றனர்.

ஆனல், இம்முறை கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொட்டி, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையிலிருக்கின்ற இட்துசாரியினர் செயல்பட்டிருக்கின்ற முறை, சனநாயக ஆட்சி முறையில் நம்பிக்கையுடைய அனைவரையுமே வேதனைப்படுத்துவதாகவும், வெட்கித் தலைகுனியச் செயய்யக்கூடியதாகவும் அமைந்துவிட்டிருக்கிறது. சனநாயக ஆட்சி முறையில் அசைக்கமுடியாத பற்றும் நம்பிக்கையும் வைத்துக்கொண்டிருக்கின்ற எவரும், வெறுக்கத்தக்க இம்முறையை வன்மையாகக் கண்டிக்கத்தான் செய்வர்.

இந்த விரும்பத்தகாத நிகழ்ச்சியை, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையில் இடம்பெற்றுள்ள முன்னேற்றக் கழகம் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை, இரா.செழியன் அவர்கள், தம் பேச்சின் வாயிலாகவும் செயலின் வாயிலாகவும் மெய்ப்பித்துள்ளார். சனநாயக நடைமுறைக்கு ஊறுதேடக்கூடிய எந்தவிதப் போக்கையும் தாம் மேற்கொள்ள முடியாது என, இறுதிவரை உறுதியுடன் அவர் செயல்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

சென்ற திங்கள் பத்தொன்பதாம் நாள் நடைபெற்ற இந்திய அரசு ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்தின்போது அரசு ஏவிய கடுமையான அடக்குமுறையையும், வேலைநிறுத்தத்தின் தொடர்பாக ஊழியர்கள் பலர்மீது மேற்கொண்ட வேலைநீக்கம் போன்ற கடுமையான நடவடிக்கைகளையும் கண்டிக்கும் கருத்திலும், அரசு பிறப்பித்துள்ள வேலைநீக்க ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தும் நோக்கிலுமே, காங்கிரசு அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியைச் சேர்ந்த பலரும், அரசு ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்திற்கு எதிராக எடுத்துக்கொண்டிருக்கின்ற கடுமைமிக்க தீவிரமான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்துப் பேசியுள்ளனர்.

இந்த விவாதத்தின்போது உள்துறையமைச்சர், அரசு ஊழியர்கள் சிலர்மீது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளைத் திரும்பப் பெற முடியாது எனக் குறிப்பிட்டிருக்கின்ருர். இருந்தாலும், தலைமையமைச்சர் என்ற முறையில், இந்திரா காந்தி அவர்கள் இதுபற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கின்ருர் என்பதும், அவர் வாய்மூலம் கூறியாக வேண்டும். இப்படிக் கூறவேண்டியது அவருக்குள்ள உரிமை என்பதுடன், தலைமை அமைச்சர் என்ற முறையில் அவருக்குரிய பொறுப்பான கடமையுமாகும்.

எதிர்க் கட்சியினர் கூறிய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இந்திரா அமைச்சரவைமீது சாட்டப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுக்கள் ஆகும். எனவே, தம் அமைச்சரவைமீது சாட்டப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகளுக்குரிய விளக்கத்தைத் தரவேண்டிய முழுப் பொறுப்பும் தலைமை அமைச்சர் என்ற முறையில் இந்திரா காந்தி அவர்களுக்கு இருக்கிறது.

உள்துறை அமைச்சர் வெளியிட்டிருக்கின்ற கருத்தைத்தான் தலைமை அமைச்சரும் திருப்பக் கூறுவதாக இருக்கும்பட்சத்தில், அவர் பேசுவதில் பொருளில்லை; 'தலைமை அமைச்சரைப் பேசவிடப்போவதில்லை' என்ற முடிவில், எதிர்க் கட்சியைச் சேர்ந்த இடதுசாரியினர் பிடிவாதமாகச் செயல்பட்டிருக்கின்றனர். இப்படித் தலைமை அமைச்சரைப் பேசவிடாமல் தடுக்கின்ற முறையில் செயல்பட்ட இடதுசாரிகளைச் சமாதானப்படுத்த, நாடாளுமன்றத்தின் கண்ணியத்தைப் பாதுகாக்கின்ற முறையில் நடந்துகொள்ளும்படி மன்றத் தலைவர் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. அவர் மேற்கொண்ட முயற்சியில், அவருடைய நா வறண்டுபோனதுதான் பலன்.

மன்றத்தில் வீற்றிருந்த முதுபெரும் கிழவரான கிருபளானி அவர்களும், 'தலைமை அமைச்சரை, விவாதத்திற்குப் பதிலளிக்க விடுங்கள் -- அதுதான் முறை' என பன்னிப் பன்னி வேண்டிக்கொண்டார்; அவர் வேண்டுகோளும் வீணுகிவிட்டது.

"நான், சில சொல்ல நினைத்தேன்; ஆனல் நான் பேசப்போவதில்லை. எதிர்க் கட்சியினரின் மிரட்டலுக்குப் பணிந்து எதையும் நான் சொல்லப்போவதில்லை" என இறுதியாகத் தலைமை அமைச்சர் அறிவித்துவிட்டு, விவாதத்துக்குப் பதிலளிக்காமலே தம் இருப்பிடத்தில் அமர்ந்துவிட்டார்கள்.

## ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (1)

[எஸ். ஆர்.]

# கண்டவை-கேட்டவை-உணர்ந்தவை

பறக்கும் வண்டுதான் தேனைச் சேகரிக்கும் (Wandering Bee Gathers Honey) என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி.

நாடுகள் பிடிக்கப் புறப்பட்டதாகக் கூறப்படும் செங்கிஸ்கானின் நோக்கத்தினைக்கூடச் சற்று ஆழ்ந்து ஆராய்ந்தால், 'நாடுகள் காண வேண்டும்' என்ற அவாவே அவனது மனத்தில் முதன் முதல் இருந்திருப்பதாக அறிய முடிகிறது.

நிலைமைகளை நேரில் காண்பது -- கண்டறிவது -- கண்டறிந்தனவற்றை எழுதுவது என்பதுதான், செய்தித் தாள்களுக்கிடையே உள்ள தன்மையினை வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அடிப்படை.

பத்திரிகையாளர்களை நோக்கித் தகவல்கள் செல்லும்; செய்திகளைத் தேடிப் பத்திரிகையாளர்கள் போவார்கள்; இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதே தவிர, புதிதானதல்ல!

'கண்ணுடிக்கு ஏற்றப் பார்வை' என்பது செய்தித் தாள்கள் உலகத்துக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

மனிதர்களின் கை ரேகை எப்படித் தனித்தன்மை பெற்றதோ அப்படித்தான் செய்தித் தாள்களின் நடைமுறையும்.

'கரு' மாறவில்லை என்ருலும், ஒரே செய்தி ஒவ்வொரு இதழிலும் தனித்தனி உருவில் இருக்கக் காண்கிருேம்!

இப்படிச் சிறப்புப் பெற்ற ஓர் உலகத்துக்குச் சொந்தமானவர்களை ஒன்ருகச் சேர்த்து, 'பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள்' என்று அரசு அனுப்பிவைப்பது சுவையானதோர் 'விஷப் பரீட்சை'தான்;

செய்தி -- விளம்பரத் துறைக்குத் தற்காலிகப் பொறுப்பேற்றிருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், தமது வழியனுப்பு விழா உரையின்போது மிகப் பொருத்தமாகக் கூறியபடி, செய்தியாளர்கள், தாங்கள் கண்டவைகளை --- கேட்டவைகளை --- உணர்ந்தவைகளை எடுத்துக் கூறுவதற்காகத் தமிழக அரசினர் தயாரித்திருந்த ஒரு நிகழ்ச்சியே இச்சுற்றுலா.

**சென்ற இடங்கள் ஐந்து மாவட்டங்கள்; போய்வந்த தொலைவு 2375 கிலோமீட்டர்கள்; பார்த்த திட்டங்கள் 37-க்குமேல்; பயணம் சென்ற நாட்கள் ஏழு.**

காலம் போதுமா? பார்த்த இடங்கள் இவ்வளவுதாஞ? இந்த நிலையில், ஒரு முடிந்த கருத்துக்கு வருவது எப்படி? --- என்றெல்லாம் கேள்வி எழ அவசியமில்லை.

ஏனெனில், சென்றுவந்தவர்கள் செய்தியாளர்கள்! நேரில் இல்லாதனவற்றையும் 'பார்க்க' முடிந்தவர்கள்! கேட்கமுடியாதனவற்றையும் கிரகிக்கக்கூடியவர்கள்!

அலுவலக அதிகாரிகள் -- அரசியல் தலைவர்கள் -- தனி மனிதர் -- பொதுமக்கள் -- அணைக்கட்டுகள் -- சாலைத் திட்டங்கள் -- சமுதாயக் கூடங்கள் -- சீரணிப் பணிகள் எல்லாம் அவர்களது பார்வைக்கு வந்தன! பார்க்க முடியாதனவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்! காதுகளுக்கு எட்டாதனவற்றை யூகித்துப் புரிந்துகொண்டனர்!

"பார்த்தீர்களா -- இதுதான் இந்தத் திட்டத்தின் சிறப்பு" என்ற பெருமிதம்!

"கேளுங்கள்; இதுதான் எங்கள் தேவைகள்" என்ற விண்ணப்பங்கள்!

இப்படி, எல்லாமே இந்தப் பயணத்தில் தெரிய வந்தது!

இவைகளையல்லாமல், செய்தியாளர்கள், 'சுய முயற்சி'யால் புரிந்துகொண்டவை பல!

ஆக, சுற்றுலா எல்லோருக்கும் -- எல்லா வகையிலும் வெற்றியளித்த ஏற்பாடு என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது.



வழியனுப்பிவைத்த பொதுப்பணி அமைச்சர் திரு. கருணநிதி அவர்களுடன் சுற்றுலாக் குழுவினர்.

வழியனுப்பு விழா நிகழ்ச்சிக்கு வந்திருந்த அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் சுட்டிக்காட்டியபடி, சென்றுவந்த இடங்கள் -- பார்த்துவந்த திட்டங்கள்பற்றிச் செய்தியாளர்கள் தரும் ஆய்வுரைகள், திரும்பவும் மக்களுக்கே பயன்படும் ஒரு நல்ல முயற்சி!

இதனை, அரசினருக்கு மேலாக மக்கள் சற்று அதிகமாகவே அறிந்திருக்கிருர்கள் என்பதனை, ஆங்காங்கே அவர்கள் காட்டிய ஆர்வம் புலப்படுத்தியது.

அரசியல் தலைவர்கள் -- அதிகாரிகள் -- அமைச்சர்கள் ஆகியோரையே பெரும்பாலும் சந்திக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும், அவர்களுக்கெல்லாம் அடிப்படையான மக்களையும் அவர்களின் பின்னணி நிலைமைகளையும் நேருக்கு நேர் காணும் வாய்ப்பு ஒரு நல்ல அனுபவம் தான்.

"ஏன் இத்தனைக் காலதாமதம் -- எதற்காக இந்தப் போக்கு" என்று அமைச்சர்களையும், அரசியல் தலைவர்களையும் அன்புடன் கடிந்துகொள்ளும் செய்தியாளர்கள், அதற்கான மூல காரணத்தை ஓரளவுக்கு அறிந்துகொள்ளக் கூட இந்தச் சுற்றுலா உதவியது.

ஏழு நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சிக்குக்கூட, சுற்றுப்பயணக் குழு, குறிப்பிட்டிருந்த நேரத்துக்குச் செல்ல முடியவில்லை.

வழியெல்லாம் வரவேற்புகள் -- விருந்துகள் -- விண்ணப்பங்கள் -- விளக்க உரைகள் -- சிறப்

(4-ம் பக்கம் பார்க்க)

நாம் எதை விரும்புகிருேமோ---நாம் எதைச் சொல்லவேண்டும் என்று நினைக்கின்ருேமோ--எது நமக்குத் திருப்தி அளிக்குமோ---அதைத்தான் நாம் அமைதியாகக் கேட்போம்; சொல்ல அனுமதிப்போம்; விருப்பமில்லாததை--நமது கருத்துக்கு நேர் முரணனதை--நமக்கு அதிருப்தி அளிக்கக்கூடியதை, நாடாளுமன்றத்தில தலைமை அமைச்சராக இருப்பவர் சொல்லக்கூடாது; சொல்லுவதைக் கேட்கமாட்டோம்---என்ற முறையில் முடிவுகட்டிக் கொள்ளுவது, சனநாயக ஆட்சிமுறைக்கு உடன்பாடானது அல்ல. இயற்கையான நீதி முறைக்குக்கூட விரோதபானது---அத்தகைய மனப்பாங்கு.

—கா. க.

## ஐந்து நூற்ருண்டுக்குக் கெடாதிருக்கும் காகிதம்

500 ஆண்டுகள்வரை கெடாத காகிதம் இப்போது பிரிட்டனில் தயாரிக்கப்படுகிறது.

இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள காகிதத்தின் சோதனை வெற்றிகரமாக முடிந்தது -- காகி

(8-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்குச் சோதனைக் காலம்

## குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக வேண்டும்

பெரு வெள்ளம் போன்ற மக்கள் தொகைப் பெருக்கத்தை அணை போட்டுத் தடுக்க இந்தியா பெரும் முயற்சி செய்துவருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டுவருகின்றன. பிள்ளை உண்டாவதைத் தடுக்க இந்தியாவில் அறுவை மருத்துவம் செய்துகொண்டுள்ள ஆடவர்களின் தொகை எவ்வளவு தெரியுமா?

உலகில் பிற நாடுகள் அனைத்திலும் இம்மருத்துவம் செய்துகொண்ட மொத்தப்பேர்களையும் விட அதிகம்.

இந்தியாவிலே ஏறத்தாழ 35 இலட்சம் 'லூப்' வளையங்களைப் பெண்கள் பயன்படுத்திவருகின்றனர். 1905-ம் ஆண்டுமுதல் ஆசியப் பெண்களுக்கு வழங்கப் பெற்றுள்ள மொத்த 'லூப்' 50-இலட்சம்.

### 13 இலட்சம் டாலர் உதவி

1967-ம் ஆண்டில் யு.எஸ்.ஏ. ஐ.டி. என்ற அமெரிக்க அரசின் வளர்ச்சிப் பணி உதவி நிலையம் கருத்தடுப்புக் கருவிகளை வாங்கி இந்தியர்களுக்கு வழங்கப்படுவதற்காக 13-இலட்சம் டாலர் வழங்கியது.

1967—68 நிதி ஆண்டின் 12 மாதங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு அமெரிக்கா நேரடியாக உதவி செய்வதற்கு ஒதுக்கியிருந்த 35 இலட்சம் டாலர் தொகையிலிருந்து இது வழங்கப்பட்டது.

உலகிலேயே மக்கள் தொகை மிக்கது ஆசியா கண்டம்தான் உலக மக்கள் தொகையில் 100க்கு 56 பேர் இந்தக் கண்டத்தில் வசிக்கின்றனர்.

ஆசியாவில் மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுக்காமல் அப்படியே விட்டுவிட்டால், இன்னும் 32 ஆண்டுகளில்—கி. பி. 2000-ஆம் ஆண்டில்—தற்சமயம் உள்ள 200 கோடி 450 கோடியாகிவிடும்.

அந்த ஆண்டில் உலகின் மக்கட் தொகை 700 கோடியாகிவிடும்—இப்பொழுதுள்ள பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைக்கப்படாவிடில்!

பிறப்பு விகிதத்தை விரைவில் குறைக்காவிடில், மக்கள், பஞ்சத்தால் மடிவர்!

இந்தியா, குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் அவ்வளவு முன்னேருததற்குக் காரணம் போதிய நிதி வசதியும், பயிற்சி பெற்ற ஊழியர்களும் இல்லாமையே ஆகும்.

# பாகுபாடு இல்லாத இரயில்!

## குழந்தைகள் பெற்ற பரிசு

கருநாடக மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு, நேருவின் நினைவாக ஒரு அருமையான பரிசு கிடைத்திருக்கிறது.

தலைநகரிலுள்ள பூங்கா ஒன்றில் அவர்களை ஏற்றிக்கொண்டு இரண்டு மைல்கள் சுற்றிவர, ஒரு 'புட்டாணி எக்ஸ்பிரஸ்' (சின்னஞ் சிறு இரயில்வண்டி) அமைக்கப்பட்டுள்ளது.

பெரியவர்களின் இரயில்களில் உள்ள முதல் வகுப்பு, கடைசி வகுப்பு போன்ற 'வகுப்புப் பிரிவினை'கள் இந்தக் குழந்தைகள் இரயிலில் இல்லை.

குழந்தைகளிடையே பேசிய மாநில முதலமைச்சர் வீரேந்திர பாட்டில், இதைக் குறிப்பிட்டு, 'இதில் பயணம் செய்யும் குழந்தைகளும், உள்ளவர்கள்--இல்லாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாத புதிய சமுதாயத்தை இலட்சியமாக வைத்துக்கொள்ள வேண்டும்' என்று கூறினர்.

# மேயர் -- துணை மேயருக்குப் பாராட்டு விழா

## கருணாநிதி--மாதவன் -- என். வி. என். பங்கேற்பு

சென்னை, நவ. 18—

புதிய மேயர், துணை மேயரைப் பாராட்டும் வகையில், நேற்று மாலை மாவட்ட -- பகுதி தி.மு.க. சார்பில் 9-வது வட்டம் மீனாட்சியம்மன் பேட்டையில் சிறப்பாக விழா நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் துணைச் செயலாளர் சு. பாலன் தலைமை தலைமைதாங்கினார்.

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், பகுதிச் செயலாளர் பி. கே. மாரியப்பன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

தோழர்கள் சேதுராசன், தனசேகரன், பெருமாள், எம். வேதாசலம் எம்.எல்.ஏ., வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சட்ட அமைச்சர் செ. மாதவன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆகியோர் பேசினர்.

அடுத்து மேயர், துணை மேயர் ஆகியோருக்குப் பாராட்டுரை (மாவட்டக் கழகச் சார்பில்) வாசித்தளிக்கப்பட்டது.

துணை மேயர் கோவிந்தசாமியும், மேயர் வேலூர் டி. நாராயணனும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

இறுதியாகப் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி பேசினர்.

பாராட்டு விழாவை முன்னிட்டு வட்டத்தில் எங்கு நோக்கினும் வண்ணவிளக்குகளும், முழக்கங்களைத் தாங்கிய பதாகைகளும், தென்பட்டன. மக்கள் பெரும் திரளாகக் கூடியிருந்தனர்.

# உ. பி. ஆசிரியர்களின் 'வியாபாரம்'

## தடுப்பதற்குச் சட்டம் இயற்றுகிறது அரசு

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஓர் ஆசிரியர், பொதுவாக ஒரு நாளைக்கு 12 'டியூஷன்'கள் வரை வைத்துக்கொண்டிருக்கிறாராம்.

கல்லூரி ஆசிரியர் ஒருவர், ஒரு நாளைக்கு 23 'டியூஷன்'கள் சொல்லிக்கொடுப்பது கல்வித் துறையின் கவனத்திற்கு வந்துள்ளது.

இவ்வளவு அதிகமாக 'டியூஷன்'கள் வைத்துக்கொள்வதால், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் சரிவர வேலை செய்ய முடிவதில்லை; எனவே, இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் இயற்ற, உத்தரப் பிரதேச அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது!

# வாக்காளர் பட்டியல்

## சிவகாசி நகரவாசிகள் கவனிக்க

"சிவகாசி நகராட்சித் தேர்தல் தொடர்பான வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு வார்டிலும் கழக முக்கிய தோழர்கள் வசம் உள்ளது. அதனைப் பார்வையிட்டு, திருத்தம் செய்யவேண்டியதோ, புதிதாக வாக்காளர்கள் சேர்க்க வேண்டியதோ இருப்பின் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"18—11—68 முதல் 18—12—68 முடிய புதிய வாக்காளர்கள் சேர்க்க நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்துகொள்ளலாம்"

என்று, சிவகாசி நகர தி. மு. க. செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிறார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்தின் வலிமை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த காகித நிறுவனம் ஒன்று இந்த வகைக் காகிதம் தயாரிக்கிறது; சாதாரணமாகக் காகித உற்பத்தியில் பயன்படும் அமிலத்திற்குப் பதிலாகச் சுண்ணும்புக் கலவையுடன்கூடிய இரசாயனக் கலவையைக் கலந்து காகிதம் தயாரிக்கிறது இந்நிறுவனம். 24-ம் நூற்றுண்டுக்குப் பின்னும் இம்முறையில் தயாராகும் காகிதம் பயன்படும்.

அமெரிக்க அரசு, பிரிட்டிஷ் அச்சகம் ஒன்றுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப்படி, இந்த அச்சகம் 610 தொகுப்புகள் உள்ள பட்டியல் (கேட்லாக்) ஒன்றைத் தயார் செய்யப்போகிறது. இந்த ஓர் ஒப்பந்தத்திற்குத் தேவைப்படும் காகிதம் 3,600 டன்களாகும்.

# இளைஞர் காங்கிரசுக்காரருக்கு ஓராண்டுக் கடுங்காவல்


## குடிசைகட்குத் தீவைத்த வழக்கில் தீர்ப்பு

தஞ்சை, நவ. 15—

கடந்த 5—8—68 அன்று, கீழவாசல் கொள்ளுப்பேட்டைத் தெரு கிருஷ்ணன் கோவில் சந்தில் உள்ள பல வீடுகளுக்குத் தீ வைத்ததாக பாலன் என்ற பாலகிருஷ்ணன் என்பவர் மீது இ.பி.கோ. 436, 511 பிரிவுப்படி வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடத்திய உதவி நீதிபதி, பாலகிருஷ்ணன், 'குற்றவாளி' என்று தீர்ப்பளித்து, ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார்.

மேற்படி பாலகிருஷ்ணன், தான் இளைஞர் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவன் என்றும், அதனால் பொய் வழக்குப் போடப்பட்டது என்றும் வாதாடினர்.


டிவிஎஸ்
வினியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை




டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்ட நாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.
உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்-
பெங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்
மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா
TVS

# கத்தியின்றி இரத்தமின்றி புதிய அரசு கண்டோம்

## அன்பும் அறமும் இன்று கோலோச்சுகிறது

### அண்ணா ஆட்சியின் மாட்சி -- அமைச்சர் கே. ஏ. மதியழகன் பெருமிதம்

வேலூர், நவ. 12—

"எதேச்சாதிகாரிகள் இருந்த இடத்தில் இன்று அன்பு கோலோச்சுகிறது! அறம் கோலோச்சுகிறது! கத்தியின்றி - இரத்தமின்றி மக்கள் ஒரு புதிய அரசை உருவாக்கித் தந்திருக்கிருர்கள்.

"அண்ணா ஆட்சிக் காலத்தில் எங்கும் திருவள்ளுவர் படங்கள் காட்சியளிக்கின்றன! குழந்தைகளின் வாயிலிருந்து குறட் பாக்கள் குற்ருலத்து அருவிபோல் வந்துவிழுகின்றன!

"இராபர்ட் கிளைவின் படங்கள் இருந்த இடத்தில் இன்று திருவள்ளுவர் படங்கள் காட்சியளிக்கின்றன"

என்று உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் பெருமிதமுடன் குறிப்பிட்டார்.

நேற்று காலை 10 மணிக்கு வேலூர் கோட்டையில் கலெக்டர் அலுவலகத்தில் திருவள்ளுவர் படத்தை அமைச்சர் கே. ஏ. மதியழகன் திறந்துவைத்தார்.

விழாவிற்கு வடாற்காடு மாவட்ட கலெக்டர் திரு. பெல்லியப்பா தலைமை தாங்கினர்.

திருவள்ளுவரின் சிறப்புகளைப் பற்றிப் சட்டமன்றத் துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன், எம். பி. சாரதி எம்.எல்.ஏ., பலராமன் எம்.எல்.ஏ., மாவட்ட நீதிபதி சோமசுந்தரம், மன்னப்பிள்ளை ஆகியோர் பேசினர்.

ஒரு காலத்தில் இராபர்ட் கிளைவ் இருந்த இந்த கோட்டைதான் இன்று கலெக்டர் அலுவலகமாக மாற்றப்பட்டிருக்கிறது.

நன்கு அலங்கரிக்கப்பட்ட கலெக்டருடைய இந்த அறையில் தான் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் திறந்துவைத்தார்.

ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதிலும ஏராளமான மாவட்ட அதிகாரிகளும், அரசாங்க அலுவலர்களும், பொதுமக்களும் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்து உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசியதாவது:—

"திருவள்ளுவர் படத் திறப்பு விழா இந்தச் சிறிய அறையில் நடந்தாலும், இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாக அமைந்திருக்கிறது.

வடாற்காடு மாவட்டம் பல துறைகளில் மற்ற மற்ற மாவட்டங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

மற்ற மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறைகளில் இதுபோல் திருவள்ளுவர் படங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது; எனக்குத் தெரிந்தவரையில், இங்குதான் திருவள்ளுவர் படம் முதன் முறையாகத் திறந்து வைக்கப்படுகிறது என்று கருதுகிறேன்.

நான் இந்தக் கோட்டைவாசலைக் கடந்து வரும்போது பல நூற்றுண்டுகளுக்குமுன்னல் நடைபெற்ற வீரச் சம்பவங்களெல்லாம் என் கண்முன்னே ஓடி மறைந்தன!

ஆங்கில ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்திய இராபர்ட் கிளைவ் இங்குதான் இருந்தான்!

பல சிற்றரசர்களின் சரித்திரம் முடிவதற்கும் -- ஒரு புதிய சரித்திரம் உருவாவதற்கும் காரணமாக இருந்த இடமும் இதுதான்.

பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பிய டூப்ளேயும், ஆங்கில ஆதிச்கத்தை நிலைநாட்ட விரும்பிய கிளைவும் ஈடுபட்ட போராட்டங்கள் ஓய்ந்தன!

அவர்கள் திருவள்ளுவரின் குறளைப் படித்திருந்தால் இடமறிந்து காலமறிந்து -- மாற்ருன் வலிவறிந்து காரியங்களிலே ஈடுபட்டிருப்பார்கள்! வெற்றியின் வேகமும் திசையும் மாறியிருந்தாலும் மாறியிருக்கும்!

அந்த ஏகாதிபத்தியவாதிகள் இருந்த இடங்களில்தான் இன்று சாதாரண எளிய மக்கள் ஆட்சிக்கு வந்திருக்கிருர்கள்!

இந்த அரசை கத்தியின்றி-இரத்தமின்றி நீங்கள் உருவாக்கித் தந்திருக்கிறீர்சள்! ஒருமாபெரும் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியிருக்கிறீர்கள்!

அறத்தைக் கற்பிக்கும்போது, தலைசிறந்த ஆசானுகவும், பொருளைக் கற்பிக்கும்போது, பெரிய பொருளாதார விற்பன்னராகவும், அன்பைப் போதிக்கும்போது உயர்ந்த இல்லத்தரசியாகவும் வள்ளுவர் விளங்குகிருர்!

அவருடைய நூலில் அநியாயத்திற்கும், அக்கிரமித்திற்கும் ஒரு துளியும் இடம் கிடையாது! அன்பிற்கும் அறத்திற்கும்தான் இடம் உண்டு!

இன்றைய சமுதாயம் திருவள்ளுவர் கண்ட சமுதாயமாக மாறி வருகிறது!"

## கீ. வ. குப்பத்தில்:

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் வடஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது எங்கும் சிறப்பான வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

கீழ்வழித்துணையாங்குப்பம் ஊராட்சிமன்றம் அமைச்சருக்கு வரவேற்பளித்தது.

கே. டி. அப்பாதுரையார் சிலையை உணவமைச்சர் திறந்து வைத்தார்.

இவ்விழாவிற்கு இராஜகோபால் நாயுடு தலைமை வகித்தார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் இராமானுசம் அனைவரையும் வரவேற்ருர்.

## கழிஞ்சூரில்:

கழிஞ்சூர் ஊராட்சிமன்றம் உணவு அமைச்சருக்கு வரவேற்பளித்தது; மன்றத் தலைவர் ஆறுமுகம் அமைச்சரை வரவேற்ருர்.

விழாவிற்கு குடியாத்தம் வட்ட தி. மு. க. செயலாளர் பி. கே. முனுசாமி தலைமை வகித்தார்.

அமைச்சர் அங்கு ஒரு பூங்காவையும் திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கோ. விசுவநாதன், மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம், வட்டச் செயலாளர் முனுசாமி, கோதண்டம், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி பாண்டுரங்கன் ஆகியோர் அமைச்சரின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பான பெருமைகள் -- காலதாமதத்துக்குக் கேட்கவா வேண்டும்?

"ஆண்டு முழுவதும் அனுபவிக்கிருேமே இந்த அன்புத் தொல்லையை" என்ருர் -- பயணத்தின் இறுதி நாளன்று சேலத்தில் நடந்த வழியனுப்பு விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி.

நிருபர் ஒருவர் கொண்டுவந்திருந்த 'அஷ்டசூரண' வரிசைகள் இல்லாதிருந்தால், விருந்துத் தொல்லைகளினல் பாதிக்கப்பட்டோரின் தொகை அதிகமாகி இருக்கும்!

பயணத்தின்போது உடன் வந்தது மட்டுமல்லாமல், உறுதுணையாக இருந்து -- 'வழிகாட்டி'யாகப் பயன்பட்ட போக்குவரத்துத் துறை பொதுத் தொடர்பு அதிகாரி திரு. தீனதயாளன், அனைவரது நன்றிக்கும் உரியவர். 'ஜெண்டில்மென்' என அழைத்து, வேகமாக நீலகிரி மலைப் பாதையில் ஏறி இறங்கும் பஸ்சில் இருந்தபடியும் அவர் தந்த விளக்கங்கள் -- குறிப்புகள், செய்தியாளர்களுக்குப் பல 'பின்னணிக் கதை'களை உருவாக்கப் பயன்பட்டிருக்கிறது!

கால்களை எண்ணி, அதை இரண்டால் வகுத்து பஸ்ஸில் இருப்பவர்கள் தொகை சரிதானு (!) என எண்ணிப் பார்த்துப் பயணத்தை நடத்திச் சென்ற செய்தித் துறை உதவியாளர் திரு. ஜெகதீசன்—

"எங்கள் செய்தியாளர்களை இதற்கு மேல் காக்க வைக்காதீர்கள்; ஏற்கனவே காலதாமதமாகிவிட்டது" என அன்புடன் அதிகாரிகளைக் கடிந்துகொண்டு குழுவினரின் நலம் பேணிய தமிழக அரசினர் பொதுத் தொடர்பு அதிகாரி திரு. வெங்கடசாமி—

ஒவ்வொரு இடத்துக்கும் முன்கூட்டியே சென்று ஏற்பாடுகளைச் செவ்வனே செய்து முடித்த செய்தி -- விளம்பரத்துறை துணை இயக்குநர் திரு. கிருஷ்ண பாரதி—

எட்டாயிரம் அடி உயரத்திலிருந்து இறங்கி வரும்போது இரண்டு தடவை 'பிரேக்' இயங்காத பயங்கரத்தை, 'சொன்னல் பயந்துவிடுவார்கள்' எனக் கருதி -- திறமையுடன் சமாளித்து -- ஏழு நாட்களிலும் சில மணி நேரமே உறங்கி -- பெரும் பகுதியை பஸ் ஓட்டுவதிலேயே இருந்த திரு. சுப்பிரமணியம் -- அவரது உதவியாளர்கள்—

இவர்கள் அனைவரின் ஒத்துழைப்புடனும் சுற்றுலா, இனிமையும் பயனும் மிக்குடையதாக இருந்தது.

பயணம் முடிய சில மணி நேரம் இருக்கும்போது நடந்த பிரிவுக் கூட்டத்தில் நன்றி தெரிவித்த செய்தியாளர் ஒருவர் கூறியபடி, ஏழு நாட்களிலும் ஒரு குடும்ப உணர்வுதான் குழுவினரிடையே இருந்தது.

அதற்கு மேலும் மெருகேற்றுவதாக அமைந்தது ஆங்காங்கே மாவட்ட அதிகாரிகளும், அவர்களுடைய உதவியாளர்களும் காட்டிய பரிவும் பணிகளும்!

தெரிவிக்கப்பட்டிருந்த குறுகியகாலத்தில் செய்தியாளர்களுக்காக அவர்கள் தயாரித்துத் தந்திருந்த புள்ளிவிவரங்கள் --- விளக்கக் குறிப்புகள் பிரமிக்கத்தக்கவையாக இருந்தன!

மாவட்டத்தின் எல்லையில் ஆரம்பித்து வேருெரு மாவட்டத்தின் எல்லையில் கொண்டுபோய் விடும் வரையில், குழுவினருக்கு அவர்கள் செய்து முடித்திருந்த பணிகள், தவிர்க்கமுடியாத நிலையில் நேர்ந்திருந்த குற்றங்குறைகளை மறக்கவைக்கும் வகையில் இருந்தன.

'ஆமாங்க' என்றும், 'அப்படி இல்லீங்க' என்றும் தமிழில் ஆர்வத்துடன் இனிமையும் கலந்து பேசிய கோவை மாவட்ட ஆட்சியாளர் திரு. பாங்கோ, செய்தியாளர்களுடன் பஸ்ஸிலும் பயணம் செய்து தந்த பதில்கள்— விளக்கங்கள்—

நகரில் அப்போது நடந்துகொண்டிருந்த ஒரு சிறு கொந்தளிப்பு நிலைமைக்கிடையிலும் சுமார் அரை மணி நேரம் ஒதுக்கி, செய்தியாளர்களை வரவேற்றுப் பேசிய நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் திரு. அகூலிவாலாவின் பண்பு—

சுற்றுலாவின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு உணரப்பட்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

தாக்கிப் பேசினுலும், தாங்கி எழுதினுலும் சொற்பொருத்தம் இழைத்துத்தரும் பொதுப் பணி அமைச்சர் -- அவரது இலாகா தந்திருந்த ரூ. 1.50 இலட்சம் பெறுமானமுள்ள வசதிமிக்க பஸ்சில் பொறித்திருந்த திருக்குறள், செய்தியாளர்களின் பார்வையில் பட்டபடி இருந்தது; இரண்டொருவர்கூடக் குறிப்பிட்டனர்-'தேவையான குறள்தான்' என்று!

'பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லோரும் எள்ளப்படும்'

இதுதான் அந்தக் குறள்.

"எங்கள் குழுவினருக்கு, தக்க அறிவுரைகள் கூறி வழியனுப்புங்கள்" எனக் கேட்ட செய்தியாளர்களுக்கு, அமைச்சர் கருணநிதி அவர்கள், 'பத்திரிகையாளர்களுக்கு நான் அறிவுரை கூறுவதா? அதனை நீங்களல்லவா அரசினருக்குக் கூறவேண்டும்?' எனக் கூறித் 'தப்பி'த்துக் கொண்டாலும், தமது இலாகாவின் பஸ்சில் பொறிக்கப்பட்டிருந்த குறள் மூலம் பொருத்தமான அறிவுரைக்கு ஏற்பாடு செய்திருந்தார்!

விண்வெளிப் பயணங்கள் பற்றிய அனுபவங்கள் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரும் இந்நாளில், சொந்த நாட்டில் --- சொந்த மாநிலத்தில் உள்ள ஓர் ஐந்து மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்த பின்னர் தரும் கருத்துக்களை, கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைப்பது என்பது சிரமமான காரியம்தான்!

எனினும், பயணத்தின் நோக்கம் பயன் தந்து கொண்டிருப்பனவற்றை எடுத்துச் சொல்லுவதற்கும், பயனளிக்கக்கூடிய இன்னும் பலவற்றைத் தொகுத்துக் கூறுவதற்கும்தான் என்ற வகையில் இருப்பதால், செய்தியாளர்கள் இப்பயணத்தில் காட்டியிருக்கும் சிரமங்கள் எவ்வகையிலும் வீண்போகா!

துவக்கத்தில் குறிப்பிட்டபடி, தனது பெயரைக் கேட்ட மறுகணமே மன்னர் மன்னர்களையும் கலக்கத்தில் ஆழ்த்தி, உலகச் சரித்திரத்தின் ஒரு கணிசமான பகுதியினைத் தன்னுடையதாக்கிக்கொண்டிருக்கும் செங்கிஸ்கான்கூட நாடுகளைப் பிடிக்கும் ஆசைக்கிடையிலும், இடங்களைக் காணும் அவாவை, மிகுதியாகக் கொண்டு இருந்திருக்கிருன்!

காணும் அறிவு, நேர்முக அனுபவத்தை மட்டுமல்ல -- மனப்போக்கை விசாலப்படுத்துகிறது என்பதற்கு, 'சுற்றுலா' நல்லதொரு சாதனமே!

இதனைக் கருத்தில்கொண்டு செய்தித்துறையினர் தயாரித்திருந்த இந்த முயற்சி, ஒரு முழு வெற்றி மட்டுமல்ல -- இனிவரும் இது போன்ற முயற்சிகளுக்கு முதற்படியும்கூட!

[நாளை முதல் மாவட்டங்கள் பற்றிய தனிக் கட்டுரைகள்; முதலாவதாக வட ஆற்காடு

வேளாண்மை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

நிகழ்ச்சிகள்

நவ. 20: காலை 10 மணி: இராசிபுரம்—கால்நடை மருத்துவமனை கட்டடத் திறப்பு விழா; 11-30 மணி: இராசிபுரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சீருடை வழங்குதல்; பிற்பகல் 3 மணி: புதுப்பாளையம்—உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளல்; 4 மணி: இராசிபுரம்—திருவள்ளுவர் அரசினர் கலைக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தைத் திறநதுவைத்தல்; மாலை 5-30 மணி: ஊராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்கு திறப்பு விழா; 6-30 மணி: முருங்கப்பட்டி — தண்ணீர்த் தொட்டி திறப்பு விழா.

## நடக்க இருப்பவை

### 20--11--68

**புஞ்சைத்துறையம்பாளையம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: த. அரங்கசாமி; பேசுவோர்: சே. அ. இராசமாணிக்கம், செ. அரங்கநாயகம், இரா. மோகன், மாசிலாமணி, ஜி. பி. வெங்கிடு எம்.சி., து. ஆ. ஈசுவரன், பி. ஆர். கே. சாமி, இரா. முனுசாமி.

**முத்துலாபுரம்**

தி.மு.க.–எம்.ஜி.ஆர். மன்றம் சார்பில் மாலை 7-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: வ.பொன்னையா; பேசுவோர்: த. சோணையா, மது. இ. பழனியப்பன், எஸ். செல்லத்துரை, எஸ். வேல்சாமி, பன்னீர்செல்வம், எம். இரத்தினம்.

**திருவில்லிபுத்தூர்**

ஏழாவது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7-மணிக்கு தெற்கு ரத வீதியில்; தலைவர், எஸ். டி. கொழுந்து; பேசுவோர்: மு. இராமநாதன், ஏ. பி. மனோன்மணி. (துரை. நாரணன் குழுவினரின் கலை நிகழ்ச்சி உண்டு)

**அந்தியூர்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: ஏ. என். சுப்பிரமணியன்; பேசுவோர்: சே. அ. இராசமாணிக்கம் எம்.சி., ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ. செ. அரங்கநாயகம், இரா. மோகன், கே. என். கே. இராமசாமி, எஸ். ஆர். பொன்னுசாமி, மற்றும் பலர்.

## குழுக் கூட்டம்

ஆரணி வட்ட தி. மு. க. கூட்டம் 20—11—69 மாலை 3-மணிக்கு ஆரணி பயணியர் விடுதியில் நடைபெறும்; அதுபோது வட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவருது கலநது கொள்ளுமாறு வட்டச்செயலாளர் மு. ந. இராமன் கேட்டுக் கொள்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண. செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.